INDIAN JOURNAL OF TAMIL | Volume 1 | Issue 3

இந்திய தமிழ் ஆய்விதழ்

Check for updates

REVIEW ARTICLE

# சங்க இலக்கியத்தில் விருந்தோம்பலின் நோக்கும் போக்கும் ஓர் மீள்பார்வை

**கி. தேன்மொழி [அ]**

[அ] தமிழாய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி, குளித்தலை, கருர்-639120, தமிழ்நாடு, இந்தியா.

# A Review of the Aim and Trend of Hospitality in Sangam Literature

**K. Thenmozhi [a, *]**

[a] Department of Tamil, Government Arts College, Kulithalai, Karur-639120, Tamil Nadu, India.
*Corresponding Author Email: thenmozhiphdbdu@gmail.com

(Received: 27th July 2020; Accepted: 20th August 2020)
DOI: http://doi.org/10.34256/ijot2032

**Abstract:** Hospitality plays a very important role in the culture of Tamils. Hospitality has been one of the life ethics of the people of the Sangam period. This article sets out to review the hospitality and culture of the Sangam literature. We will see about them in this article.

**Key Words:** Sangam literature, Sangam period, Tamil Culture,

## முன்னுரை

விருந்தோம்பல் என்பது புதிதாக வருபவர்களுக்கு அளிக்கக் கூடிய உணவினைக் குறிக்கும் சங்க கால மக்கள் தாங்கள் உணவு உண்பதற்கு முன்பு யாரேனும் புதியவர் அல்லது விருந்தினர் வந்துள்ளனரா என்று பார்த்துவிட்டு அதன் பிறகே தங்கள் உணவினை உண்ண ஆரம்பிப்பர்.

## தொல்காப்பியரும் விருந்தும்

விருந்து என்பதற்குப் ‘புதியது’ என்று

‘விருந்துதானும் புதுவதுகிளந்த யாப்பின் மேற்றே’ (தொல்.பொரு.237)

என்னும் நூற்பாவில் கூறியுள்ளார் (Ilampuranar, 2005).

## விருந்தோம்பல்

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே இல்லறத்தின் தலையாய நெறியாகும்.

விருந்தோம்பல் இல்லாத வாழ்க்கை இல்வாழ்க்கை ஆகாது. விருந்தோம்பலில் பெரும்பங்கு பெண்ணையே சாரும். இதனை,

'நல்விருந் தோம்பலின் நட்டாள்' (திரி:64.1)

எனத் திரிகடுகம் எடுத்துரைக்கின்றது.

தொல்காப்பியரும் மனைவிக்குரிய மாண்புகளாக விருந்தோம்பலையும் சுற்றம் ஓம்பலையும்

'விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும், அன்னகிழவோள் மாண்புகள்' (தொல்.கற்.11)

என்னும் தொல்காப்பிய வரிகள் சுட்டுவதைக் காணலாம்.

இல்லறத்தில் கணவன் மனைவி இருவரும் இணைந்து விருந்தோம்ப வேண்டும். என்பதை

அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்

துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'

(சிலம்பு.கொலை.காதை.71-73)

என்னும் அடிகளில் இளங்கோவடிகளும் குறிப்பிட்டுள்ளார்.

தொன்மைச் சிறப்பு வாய்ந்த தமிழ் இன மக்கள் நல்ல பண்பு மிக்கவர்கள். அவர்களின் பண்புகளில் சிறந்து விருந்தோம்பல் ஆகும்.

சங்க காலம் முதற்கொண்டு விருந்தினரைப் போற்றி வாழ்கிறார்கள். விருந்தினர்களைப் பொற்றி வாழ்வதினாலேயே தமிழர்கள் உலகம் முழுவதும் புகழுடன் வாழ்கிறார்கள் என

நற்றமிழர் சேர்ந்தபுகழ்

ஞாலத்தில் என்னவெனில்

உற்றவிருந்தை உயிரென்று - பெற்றுவத்தல் (குடும்பவிளக்கு)

தம்மை வந்து அடைந்த விருந்தினர்களுக்குத் தமிழர்கள் விருந்தோம்பலைத் தம் உயிருக்கும் மேலாகக் கருதினர். எனவே, விருந்தினரைப் பேணும்பொழுதும் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்கள் எனக் குறிப்பிடுகிறார்.

## விருந்தோம்பும் முறை

விருந்தை, விருந்தினர் மனம் மகிழும்படி செய்வது சிறப்பு. மலர்கள் வெம்மையால் வாடும். அனிச்சம் மிகவும் மென்மையானது. ஆதலால் முகர்ந்தால் அது வாடிவிடும். அதைப்போன்று விருந்தினரும் மிக மென்மையானவர்கள். முகம் திரிந்து நோக்கினாலே

வாடிவிடுவர். இதனை,

‘மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து’ (குறள்.90)

என்னும் குறளில் காணலாம்.

விருந்தினரிடம் நண்பனைப் போல உறவு கொண்டு, இனிய சொற்களைக் கூறி கண்ணில் காணும்படி தனக்கு நெருக்கமாக இருக்கச் செய்து விருந்தினரிடம் அன்புகாட்டி எலும்பே குளிரும்படியான அன்பால் நெகிழச் செய்ய வேண்டும். என்பதை

கேளிர் போல கேள்கொளல் வேண்டி

வேளான் வாயில் வேட்டக் கூறிக்

கண்ணிற் காணநண்ணுவழி இரீஇப்

பருகுவன் னவருகா நோக்கமொடு

உருகுபவைபோலென் புகுளிர்கொளீஇ (பொருநர்.74-78)

என்ற பாடல் வரிகளில் காணலாம்.

புலவகையான உணவினை விண்மீன்கள் போலக் கிண்ணத்தில் பரப்பி விருந்தினரை அன்போடு நோக்கி, அவர்கள் விரும்பியதைக் குறிப்பறிந்து கொடுத்து ஓம்பல் வேண்டும் என்பதை

மீன்பூத் தன்னவான்கலம் பரப்பி

மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து

ஆனாவிருப்பிற் றானின் றூட்டி (பெரும்.477-479)

என்னும் பாடலடிகளில் தானின்றூட்டி என்ற அடியில் விருந்து படைப்பவரே அருகில் இருந்து விருந்தினர் வீரம்பும் உணவினை வழங்க வேண்டும் என்பதை எடுத்தியம்பியுள்ளதை அறியலாம்.

## விருந்தோம்பலில் அரசர்கள்

போர்த் திறனும், வெற்றி மேம்பாடும் அன்றி விருந்தோம்பிய விதமும் அரசர்களின் பண்பை மேன்மைபடுத்துவதாக அமைந்துள்ளது. அத்தகைய பண்பு அவர்களின் புகழுக்கும் அச்சாணியாக இருந்தது என்றால் மிகையாகாது. சோழன் கரிகாற்பெருவளத்தான், தன்னிடம் வரும் இரவலர்களை ஆர்வமுடன் நோக்கி, இன்மொழி கூறி, ஆடைகள் தந்து

‘பெறலருங் கலத்திற் பெட்டாங் குண்கெனப்

பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர

வைகல் வைகல் கைகவி பருகி’ (பொருநர்.156-158)

மது அருந்தச் செய்து, புலால் உணவுடன் அரிசிச் சோறு ஆகிய உணவுகளைத்

தந்து, களிறுகள், பிடிகள், பொற்றாமரை, பொன்னரிமாலை போன்யவற்றையும் தந்தான் என்று பொருநராற்றுப்படை கூறுகின்றது.

மேலும்,

விளங்குபொற் கலத்தில் விரும்புனபேணி

ஆனாவிருப்பிற் றானின் றூட்டும் (சிறுபாண்.244-245)

என்னும் அடிகளில் நல்லியக்கோடன் என்ற மன்னனின் விருந்தோம்பல் பண்பு வெளிப்படும் பாங்கினைக் காணலாம்.

## ஆயர்களின் விருந்தோம்பல்

ஆயர்கள் மாடு மேய்க்கப் புறப்படும்போது உணவினை மூங்கில் குழாயில் இட்டு மாட்டின் கழுத்தில் கட்டிக் கொண்டு காட்டு வழியே செல்வர். அங்கு யாரும் பசியோடு வந்தால் தாம் மட்டும் உண்பதற்கு வைத்திருக்க உணவினை அவர்களுக்குப் பகுத்துக் கொடுப்பர். இதனை,

.......................கோவலர்

முழவிடைப் பூட்டியகுழாஅய்த் தீம்புளி

செவிஅடைதீரத் தேக்கிலைப் பகுக்கும்

புல்லிநல் நாட்டு உம்பர் (அகம்.311: 9-12)

என்ற அகநானூற்றுப் பாடலில் ஆயர்களின் விருந்தோம்பல் பண்பு எடுத்துரைக்கப்படுவதைக் காணலாம் (Avvai S. Duraisami Pillai, 1966).

## இடையர்களின் விருந்தோம்பல்

ஆடு மேய்க்கும் இடையர்கள் தங்கள் இல்லில் தங்கும் விருந்தினர்களுக்குப் பாலும், பால் சோறும் வழங்கினர். இதனை,

'பல்யாட் டினநிரைஎல்லினர் புகினே

பாலுமிதவையும் பண்ணாதுபெறுகுவீர்' (மலைபடு:416-417)

என்ற அடிகளில் காணலாம்.

## வறுமையில் விருந்தோம்பல் பண்பு

பொருளையெல்லாம் இழந்து வறுமையுற்று காலத்தும் விருந்திரைச் சிறப்பாக ஓம்புதலைச் சங்ககால மக்கள் தங்கள் கடமையாகக் கொண்டிருந்தனர். வறுமையுற்று விருந்தோம்பா நிலையிலும் ஒருவன் முதல்நாள் தன் பழைய வாளை விற்றும் அடுத்த நாள் யாழை அடகு வைத்து விருந்தோம்பினான் என்பதை

'நெடுநை வந்தவிருந்திற்குமற்றுத் தன்

இரும்புடைப் பழவாள் வைத்தானன் இன்றுஇக்

கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்' (புறம்.316:5-7)

என்ற அடிகளில் காணலாம் (Avvai Duraisamy Pillai, 1996).

வரகும் தினையும் இரவலர்க்கு ஈந்து தீர்ந்தன. வேறு வகையில் பொருள் பெற வழியில்லை. அந்நிலையில் விதைக்கு இருந்த தினையை உரலில் இட்டுக் குத்தி மகளிர் விருந்தளித்தனர். இதனை,

'வரகும் தினையும் உள்ளவையெல்லாம்

இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்

குறித்துமாறு எதிர்ப்பைபெறா அமையின்

குரல்உணங்குவிதைத்தினை உரல்வாய்ப் பெய்து'(புறம்.333:9-12)

என்ற பாடலில் வேட்டுவ மகளிரின் விருந்தோம்பல் பண்பு எடுத்துரைக்கப்படுகின்றது.

விருந்தினர்கள் விருந்துமுடிந்து வெளியில் செல்லும் போது அவர்களின் பின் ஏழடி நடந்து சென்னுவிட்டு வருவது வழக்கம் என்பதனை

பால்புரை புரவிநால்குடன் பூட்டிக்

காலினேழடிப் பின்சென்றுகோலின்

தாறுகளைந் தோறன் றேற்றி (பொருநர்.165-167)

என்னும் பாடலடியில் காணலாம்.

## முடிவுரை

சங்க இலக்கியங்களில் விருந்தோம்பலின் நோக்கும் போக்கும் என்னும் இக்கட்டுரையில் சங்க கால மக்களின் பண்பாடுகளில் ஒன்றான விருந்தோம்பல் முறை எவ்வாறு இருந்தது என்பதனையும், அவர்கள் வறுமையுற்ற காலத்தும் புதியவர்களுக்கு விருந்திக்கு பண்பாட்டினைக் கடைபிடித்துள்ளனர் என்பதனையும், சங்க இலக்கியப் பாடல்கள் நமக்கு எவ்வாறு உணர்த்தி நிற்கின்றன என்பது பற்றியும் இதுகாறும் நாம் கண்டோம்.

## References

Ilampuranar, (2005) Tholkapiyam Porulathikaram, First Edition, Saradha Pathippagam, Chennai, India.

Avvai S. Duraisami Pillai, (1966) Agananooru - Moolamum Uraiyum, Aruna Publications, Chennai, India.

Avvai Duraisamy Pillai, (1996) Purananooru Moolamum Uraiyum, Kazaga Veliyedu, Chennai, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License